நெஞ்சம் மறக்குமா நெஞ்சம் மறக்குமா நெஞ்சம் மறக்குமா
வல்வெட்டித்துறையில் நாங்கள் வளர்த்த சிதை நெருப்பில்
பன்னிரண்டு புலிகள் ஒன்றாய்ப்
படுத்ததை நெஞ்சம் மறக்குமா
படுத்ததை நெஞ்சம் மறக்குமா?

குமரப்பா புலேந்தி அப்துல்லா
ரகு நளன் பழனி
மிரேஸ் றெஜினோல்ட் தவக்குமார்
அன்பழகன் கரன் ஆனந்தகுமார் *-(2)*

எங்கள் தலைவர்கள் எங்கள் வீரர்கள் இவர்களல்லவா"?
கண்கள் மூடி எங்கள் புலிகள் மாண்ட கதையைச் சொல்லவா?
தங்கத் தமிழீழ விடுதலை காண நெஞ்சம் துடித்தாரே
சிங்கள இந்திய அரசுகள் சதியால் நஞ்சு குடித்தாரே

வல்வெட்டித்துறையில் நாங்கள் வளர்த்த சிதை நெருப்பில்
பன்னிரண்டு புலிகள் ஒன்றாய்ப்
படுத்ததை நெஞ்சம் மறக்குமா
படுத்ததை நெஞ்சம் மறக்குமா?

ஈழத்தமிழன் தமிழீழக் கடலில் போனால் பிடிப்பாராம்
இந்திய உதவி கொண்டே தமிழனின்வாழ்வை முடிப்பாராம்
ஆழக்கடலில் போனபுலிகளை பிடித்துச் சென்றாரே
அழகும் இளமையும் பொங்கும் வயதில் துடிக்கக் கொன்றாரே
ஆழக்கடலில் போன புலிகளை பிடித்துச் சென்றாரே
அழகும் இளமையும் பொங்கும் வயதில் துடிக்கக் கொன்றாரே

வல்வெட்டித்துறையில் நாங்கள் வளர்த்த சிதை நெருப்பில்
பன்னிரண்டு புலிகள் ஒன்றாய்ப்
படுத்ததை நெஞ்சம் மறக்குமா
படுத்ததை நெஞ்சம் மறக்குமா?